பகவத் ராமானுஜரின்

# கத்ய த்ரயம் விளக்கம்

(ஶ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்)

1. பகவத் ராமானுஜரின் ஶ்ரீவைகுண்ட கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 2***

***ததஸ்ச ப்ரத்யஹம் ஆத்மோஜ்ஜீவநாய ஏவம் அநுஸ்மரேத்***

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***ததஸ்ச*** - ப்ரபத்தி ஸக்ருத் கர்தவ்யமானாலும், அந்த பகவத் சரண சிந்தனம் வேணும்

# ***ப்ரத்யஹம்*** - அந்த ஆயுள் உள்ள மட்டில் சிந்தமானது இருக்க வேணும்

# ***ஆத்மோஜ்ஜீவநாய*** - சப்தாதி விஷயங்களில் முமுக்ஷுவின் மனம் ஈடுபடாதிருக்க

# ***ஏவம் அநுஸ்மரேத்*** - அந்த நிரந்தர சிந்தனம் தேவையாகிறது.

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

சரணாகதி ஸக்ருத் கர்தவ்யம்.

# ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி*** என்னும் ரஹஸ்ய க்ரந்த விஷயம் :

***இப்படி அபராத அநு ரூபமாக தண்ட தரனாய்ப் போருகிற சரண்யனுடைய வசீகரணங்களில் பிரதானம் ஸர்வ அகிஞ்சன அதிகாரமான ஆத்ம ரக்ஷ பர சமர்ப்பணம்*** - பிராப்தி விரோதியான பகவந் நிக்ரஹத்தை சமிக்க ஆத்ம சமர்ப்பணம்.

***இது சபரிகரமாக ஸக்ருத் கர்தவ்யம்*** - ஆத்ம சமர்ப்பணம், அங்கங்களோடு கூடிய ஒரு முறை அனுஷ்டிக்க வேண்டிய கடமை.

ஶ்ரீராமனும் ***ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்திதச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம*** என்று

ஒரு முறை சரணாகதி செய்தவனை தான் ரக்ஷிக்கும் வ்ரதம் உடையவன் என்றான்.

# இதை பாஞ்சராத்ர சாஸ்த்திரமும் அறுதியிட்டு உரைக்கிறது.

***ஸக்ருத் ஏவ ஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேன்னரம். உபாய அபாய ஸம்யோகே நிஷ்டயா ஹீயதே அநயா***

அதாவது, சாஸ்த்திர விதிப்படி ப்ரபத்தி ***ஒரே முறை*** செய்யப் பட்டால் அது மனிதனை சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷ பலனை அளிக்கும்.

சரணாகதி ஸக்ருத் கர்தவ்யம் என்பது ப்ரமாண ஸித்தம் ; மோக்ஷ உபாயமான சரணாகதிக்கு, ப்ருஹ்மாஸ்த்திரத்தை, பூர்வர்கள் உதாஹரிப்பர்.

# ஸந்த்குமார ஸம்ஹிதா வரி :

***ராக்ஷஸானாம் அவிஸ்ரம்பாத் ஆஞ்சநேயஸ்ய பந்தனே. யதா விகலிதா ஸத்ய: த்வமோகா அப்யஸ்த்ர பந்தனா. ததா பும்ஸாம் அவிஸ்ரம்பாத் ப்ரபத்தி: ப்ரச்யுதா பவேத். தஸ்மாத் விஸ்ரம்ப யுக்தானாம் முக்திம் தாஸ்யதி ஸாசிராத்***

ப்ருஹ்மாஸ்த்திரம் இலக்கை கட்டுப் படுத்த ஸர்வ வல்லமை கொண்டது.

ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீராம தூதனாக வந்த திருவடியை கட்டுப் படுத்த ராவணனின் புதல்வனான இந்திரஜீத் ப்ருஹ்மாஸ்த்திரத்தை உபயோகித்ததாக வால்மீகி ராமாயணம் உரைக்கிறது.

இந்த ப்ருஹ்மாஸ்திரம் தானே ஸகல வலிமையையும் பெற்றிருப்பதால், இத்தோடு மற்ற அஸ்த்திரத்தை பயன் படுத்தும் போது, ப்ருஹ்மாஸ்த்திரம் செயல் இழந்து விடும். அசுரர்கள், இதை உணராது, ப்ருஹ்மாஸ்த்திரத்தை உபயோகித்திருந்தும் திருவடியை கட்டுப் படுத்த மேலும் சில ஸாமக்ரீக்களை உபயோகித்தனர். ப்ருஹ்மாஸ்த்திரம் செயலிழந்தது, என்பது இதிஹாஸம்.

அது போல, சரணாகதி ஸர்வ பாபங்களையும் விலக்கி, மோக்ஷம் அளிக்க வல்லமை கொண்டிருப்பதால், அத்தோடு வேறொரு செயலை, மோக்ஷ காரணம் என்கிற எண்ணத்தோடு அனுஷ்டித்தால், சரணாகதி அனுஷ்டானம் பலன் கொடுக்காது.

# ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழி (5-7-5)

***எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு? எவ்வ தெய்வத் துளாயுமாய் நின்று, கைத்தவங்கள் செய்யும் கருமேனி அம்மானே, செய்த வேள்வியர் வையத் தேவர் அறாச் சிரீவர மங்கலநகர், கைத்தொழ இருந்தாய் அது நானும் கண்டேனே***

அதாவது,

உன்னைப் பெறுவதற்காகக் கூப்பாடு போடுவதானது எனக்குத் தகுமோ கரிய திருமேனி கொண்ட ஸ்வாமியே ! க்ருதக்ருத்யர்களான

சரணாகதர்கள்  வர்த்திக்கிற வானமலைப் பதியிலுள்ளார் எல்லாரும் ஸேவிக்கும்படி எழுந்தருளி இருப்ப வனே! அடியேனும் அவ்விருப்புக் காணப் பெற்றேன்.

மோக்ஷ பலனுக்காக சாஸ்த்திரம் விதித்த சரணாகதியை அனுஷ்டிப்பவனை ***செய்த வேள்வியன்*** அதாவது க்ருதக்ருத்யன் என்றும் இங்குள்ள காலம் செய்யப் பெறும் பகவத் கைங்கர்யங்கள் அனைத்துமே சரணாகதனின் புருஷார்த்த கோடியில் சேர்ந்ததாகிறது.

***செய்த வேள்வியர் வையத்தேவர்*** - சாஸ்த்திரத்திலே விதிக்கப் பட்ட சரணாகதி அனுஷ்டானத்தை, ஐந்து அங்களங்களோடும், ஸாத்வீக த்யாகத்தோடும், ஒரு முறை ஒருவன் செய்தானேயானால், அவன் மோக்ஷத்திற்காக வேறு எந்த செயலும் செய்யத் தேவையில்லை, என்பதாகிறது. அவன் ***க்ருதக்ருத்யன்*** ஆகிறான். அதாவது மோக்ஷத்திற்காக தன் கடமையை செய்து முடித்தவனாகி ***வையத்தேவர்*** என்னும்படி ***மேதினி மேவிய விண்ணவர்*** ஆகிறான்.

# ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி*** என்னும் ரஹஸ்ய க்ரந்த விஷயம் :

***ராஜ குமாரனுக்கும் அவதானம் பண்ணி நடக்க வேண்டுமா போலே லகு ப்ரத்யவாயமும் வாராமைக்காக அபசாரங்கள் தூர பரிஹரணீயங்கள்*** - சரணாகதன் விஷயத்தில், இப்பிறவியில் தண்டனையிலிருந்து தப்புவதற்கு, விதி மீறல்களை தவிர்க்க வேண்டும். சப்தாதி விஷய ஈடுபாடு  ஸ்வரூப விருத்த செயல்களில் இவனை புகுத்தும் ஆகையால், சிந்தையினால் த்வய அநுஸந்தானம் தேவையாகிறது.

சரணாகதி அநுஷ்டான மந்திரமான த்வயமானது ***தன்னை ஒருக்கால் உச்சரித்தவனை ஸர்வ ப்ரகாரத்தாலும் க்ருதக்ருத்யனாக்க வல்லது*** என ஸ்வாமி தேசிகன் ***சார நிர்கர்ஷாதிகாரத்தில்*** தெளிவித்திருக்கிறார் ; ஆனால், ப்ரபன்னனின் செயல்களை வர்ணிக்கும் ***உத்தரக்ருத்யாதிகாரத்தில்*** அவன் ***உபாய நிஷ்டையை மறவாமைக்காக ‘ஸதைவம் வக்தா’ என்கிறபடியே சொல்ல வேண்டுமவற்றில் ப்ரதானம் த்வயம்*** என அருளினார் ; அதனால், த்வய மந்திர உச்சாரண த்வாராக, ஆத்ம சமர்ப்பணம்

**கத்ய த்ரயம் விளக்கம்**

(ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்)

செய்து போந்த க்ருதக்ருத்யனான ப்ரபன்னன், மீண்டும் மீண்டும் செய்யப்படும் த்வய மந்திர உச்சாரணம் அவனை க்ருதார்த்தனாக்க வல்லது, என்றபடி.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# *ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்* -

எம்பெருமானின் ரக்ஷணத்தில் நம்பிக்கை (மஹாவிச்வாசம்) மிகவும் அவசியம், என்பதாகும்.
மஹாவிச்வாசம் என்பது சரணாகதி அனுஷ்டானத்திற்கு அங்கமாக விதிக்கபட்டிருக்கிறது.
அதை பரதமுனியின் வரிகளைக் கொண்டு அறியலாம்:

***அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாசபூர்வகம் த தேகோபாயதா யாச்நா ப்ரபத்திர் சரணாகதி***

அதாவது, மஹாவிச்வாசத்தை முன்னிட்டுக் கொண்டே சரணாகதி அனுஷ்டானம் செய்ய வேண்டுவதாகும் ; இந்த மஹா விச்வாசத்தின் ப்ராதான்யத்தை பகவத் ராமானுஜர் அருளினார் :

***ப்ரபத்திர்விவாஸ: ஸக்ருத் ப்ரார்தநா மாத்ரேண அபேக்ஷிதம் தாஸ்யதீதி விஸ்வாஸ பூர்வகம் ப்ரார்தநமிதியாவத்***

அதாவது, சரணாகதி விச்வாசமே; ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடம் ப்ரார்த்தித்து நின்றால் அவன் வேண்டியதை அளிப்பான், என்கிற விச்வாசமேயாகும்.

# *ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்* -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் ***ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்***, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை வசன பூஷண க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***ரக்ஷணத்துக்கு அபேக்ஷிதம் ரக்ஷ்யத்வ அநுமதியே*** (எண் - 63)

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஸ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# *ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்* -

ஸ்வாமி தேசிகன், ***பரமத பங்கம்*** எனும் தனது ப்ரபந்தத்தில்,

***வேலை புறம் அகம் காண்பது போல் வேத நன்னெறி சேர் நூலைப் புறம் அகம் காண்டலில் நுண் அறிவு இன்றி நின்றீர் மாலைப் பெற வழி காட்டிய தேசிகர் வாசகமே ஓலைப் புறத்தில் எழுதுகின்றோம் உள் எழுதுமினே***

என அருளினார் ; அதாவது, ஆஸ்திகர்களே! கடலின் உள்ளும் புறமும் தெளிவாகக் கண்டு கொள்வது ஸாமான்ய காரியம் அன்று; அது போல, வேத வேதாந்த சாஸ்த்திரங்களை உட்புகுந்து பிழை அற அறிவது மிகவும் கடினம்; அதற்கான கூர்மையான ந்யாய, மீமாம்சா, வ்யாகரண சாஸ்த்திரங்களில் தெளிவான அறிவு உங்களிடம் இல்லை; ஆதலால், தத்வ-ஹித-புருஷார்த்த விஷயங்களில் தெளிவான ஞானத்தை, நம்

ஸதாசார்யர்கள் - ஸ்வாமி நம்மாழ்வார், ஶ்ரீமந் நாதமுனி, ஶ்ரீ யாமுனமுனி, ஶ்ரீ ராமானுஜ முனி ஆகியோர் - வழங்கிய படி, வேத சாரத்தை இந்த க்ரந்தத்தில் எழுதுகிறோம்; அதை உங்கள் மனதில் பதித்து நல் வாழ்வு பெறுவீர்களாக ! இங்கு, பூர்வாசார்யர்களின் வேத கருத்துக்களையே ப்ரவர்த்திப்பிக்க வேண்டும் என உறுதி செய்யம் பட்டிருக்கிறது ! ஆக, பகவத் ராமானுஜரின் க்ரந்த வழியிலே வந்த ஸாத்யோபாய விஷயங்களே ஸர்வருக்கும் உபஜீவ்யம் என்பதை சாப்தமாகவும் மற்றபடி ஸாத்யோபாயத்தை அநுபாயம் என கூறும் பக்ஷம் நிராஹரணீயம் என்பதை ஆர்த்தமாகவும் *__மாலைப் பெற வழி காட்டிய தேசிகர் வாசகமே ஓலைப் புறத்தில் எழுதுகின்றோம் உள் எழுதுமினே__* என ஸ்பஷ்டமாக ஸ்வாமி தேசிகன் இந்த பரமத பங்க பாசுரத்தில் தெளிவித்துள்ளார்.

(நாளை ஶ்ரீவைகுண்ட கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

**Visit : https://www.sridesikadarsanam.com/**